| Manuscript ID | TMN-12-04-2026-42 | Article type | Original Research Article |
|---|---|---|---|
| Received | 10 September 2026 | Revised | 12 September 2026 |
| Accepted | 19 September 2026 | Published online | 19 September 2026 |
| Volume / Issue | Vol. 12, Issue 04 | Pages | 565-581 |
| DOI | https://doi.org/10.63300/tm12042026.45 | | |

[ORIGINAL RESEARCH ARTICLE]

# பூசலார் நாயனார் புராணம்

— மனத்தால் எடுக்கப்பட்ட ஆலயமும், அரசன் இராசசிம்மன் கட்டிய கல்கோயிலும்: ஓர் ஒப்பாய்வு —

# Pusalar Nayanar Puranam

— The Temple Built in the Mind and the Stone Temple Built by King Rajasimha: A Comparative Study —

**முனைவர் ஜோ. சாந்தமூர்த்தி,**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*RKS சண்முகம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இந்திலி, கள்ளக்குறிச்சி*
*கைப்பேசி: 6374341178 | மின்னஞ்சல்: s89217195@gmail.com*
**Dr. J. Santhamurthy,**
*Assistant Professor, Department of Tamil, RKS Shanmugam Arts and Science College, Indili, Kallakurichi.*
**Corresponding Author Email: s89217195@gmail.com, Mobile: 6374341178*

## Abstract

As described in the Pusalar Nayanar Puranam, while Pusalar conceived the idea of building a temple in his mind and constructed it for Lord Shiva, the Pallava King Rajasimha began constructing the Kanchi Kailasanathar Temple. The outer surrounding walls of this temple, along with all the sculptures within it, are crafted as if narrating a devotional epic. The revelation brought out through this study is the event recorded by Sekkizhar in the Periya Puranam, stating that the consecration (Kumbhabhishekam) of the holy temple built by Rajasimha and that of Pusalar's temple—which he built tirelessly day and night within his mind—occurred on the exact same day.

Based on the aforementioned core narrative, this research paper systematically categorizes and analyzes the poetic descriptions from the Pusalar Nayanar Puranam. Furthermore, it compares the similarities and differences between the mind-built temple and the royal temple constructed of stone and brick using tables and explanatory figures. The central theme of this study focuses on how this puranic section establishes the Saiva Siddhanta principle that devotion relies primarily on internal devotion and thought rather than external wealth.

**Keywords:** Pusalar Nayanar; Periya Puranam; Sekkizhar; Mind-Temple (Manakkoil); Rajasimha Pallava; Kanchi Kailasanathar Temple; Bhakti Literature; Thiruninravur.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

### ஆய்வுச் சுருக்கம்

பூசலார் நாயனார் புராணத்தில் குறிப்பிட்டுள்ளது போல், அவர் மனத்தில் ஆலயம் எடுக்க எண்ணி சிவபெருமானுக்குக் கோயிலைக் கட்டியது போல், பல்லவ மன்னன் இராசசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டத் துவங்கினார். அக்கோயிலில் சுற்றுப்புற மதில்கள் அனைத்தையும் அமைத்து, அதில் உள்ள சிற்பங்கள் அனைத்தும் ஓர் பக்தி காப்பியத்தைச் சொல்வது போல் அமைந்திருக்கும். இராசசிம்மன் அமைத்த திருக்கோயிலின் கும்பாபிஷேகமும், மனத்தால் ஆலயத்தை எடுத்து இரவு பகல் பாராமல் ஆலயத்தைக் கட்டிய பூசலாரின் திருக்கோயிலின் கும்பாபிஷேகமும் ஒரே நாள் நடந்ததாகச் சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில் குறிப்பிடும் செய்தி இவ்வாய்வின் மூலமாக வெளிப்படும் செய்தியாகும்.

மேற்குறித்த மூலச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு, இவ்வாய்வுக் கட்டுரை பூசலார் நாயனார் புராணத்தின் பாடல் வழி விவரிப்பை முறையாக வகைப்படுத்தி ஆய்கிறது; அத்துடன் மனத்தால் கட்டப்பட்ட கோயிலுக்கும், கல்லாலும் செங்கல்லாலும் கட்டப்பட்ட அரசக் கோயிலுக்கும் இடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை அட்டவணைகள் மூலமும், விளக்கப் படங்கள் மூலமும் ஒப்பிட்டு நோக்குகிறது. பக்தி என்பது வெளிப்புறச் செல்வத்தைக் காட்டிலும் உள்ளக்கருத்தையே பெரிதும் சார்ந்தது என்னும் சைவ சித்தாந்தக் கோட்பாட்டை இப்புராணப் பகுதி எவ்வாறு நிறுவுகிறது என்பதும் இவ்வாய்வின் மையக் கருத்தாகும்.

### திறவுச்சொற்கள்

பூசலார் நாயனார்; பெரியபுராணம்; சேக்கிழார்; மனக்கோயில்; இராசசிம்மன் பல்லவன்; காஞ்சி கைலாசநாதர் கோயில்; பக்தி இலக்கியம்; திருநின்றவூர்.

## 1. முன்னுரை

தமிழில் புலவர்கள் காப்பியங்களைச் செய்யுள் பாடல் நெறியைப் பின்பற்றுவதாக இருப்பினும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் தொடுப்பர். இந்நான்கும் பெற்றிருந்தால் அவை தமிழ்ப் பெருங்காப்பியமாகக் கருதப்படுகின்றன. இது தமிழின் பக்தி காப்பிய மரபிற்குப் பொருந்தும். சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு எழுதப்பெற்ற வரலாறே பூசலார் நாயனார் வரலாறாகும்.

TAMILMANAM | தமிழ்மணம்
Peer-Reviewed · International · Monthly Journal of Tamil Studies
ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in




அவர் போற்றிய சைவ அடியார்களின் வாழ்க்கை வரலாற்றையும் இந்நூலில் சேக்கிழார் பதிவு செய்துள்ளார். சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கச் சோழனிடம் அமைச்சராக இருந்தார். மன்னனின் ஆணைப்படி தில்லைக்குச் சென்று நடராசர் ‘உலகெலாம்’ என்று அடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற சேக்கிழார், ‘உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அசியவன்’ எனப் பெரியபுராணத்தை எழுதத் தொடங்கினார். அதிலிருந்து பூசலார் நாயனார் புராணத்தை இயற்றினார் என்பதை,

> *"அன்றினார் புரம் எரித்தார்க்கு*
> *ஆலயம் எடுக்க எண்ணி*
> *என்றும் அங்கு உதவாத வகை*
> *உணர்வினால் எடுக்கும் தன்மை"*

எனும் பாடலடிகளில் காணலாம். பகைவரின் திரிபுரங்களை எரித்த சிவபெருமானுக்குக் கோயில் ஒன்று அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கையில், கோயிலைக் கட்டுவதற்குப் போதிய நிதி இல்லை. மனத்திலேயே ஆலயம் எடுக்கத் துவங்கிக் கோயிலை எழுப்புகிறார் பூசலார்.

### 1.1 ஆய்வு நோக்கமும் ஆய்வு வினாக்களும்

பக்தி இலக்கியத்தில் வெளிப்புற வழிபாட்டு நிறுவனங்களுக்கும், அகவழிபாட்டு அனுபவத்திற்கும் இடையே நிலவும் உறவினை பூசலார் நாயனார் புராணம் தெளிவாக

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

வெளிப்படுத்துகிறது. இவ்வாய்வு பின்வரும் வினாக்களுக்கு விடை காணும் நோக்கம் கொண்டது: (அ) மனத்தால் கோயில் கட்டும் உருவகம் பெரியபுராணத்தில் எவ்வாறு படிமலர்ச்சி பெறுகிறது; (ஆ) இராசசிம்மன் கட்டிய வரலாற்றுச் சான்று பெற்ற கைலாசநாதர் கோயிலுக்கும், பூசலார் மனத்தால் கட்டிய கோயிலுக்கும் இடையே சேக்கிழார் காட்டும் ஒப்புமையின் இலக்கியப் பயன்பாடு யாது; (இ) இப்புராணப் பகுதி சைவ சித்தாந்தத்தின் அகப்பக்திக் கோட்பாட்டை எவ்வாறு நிலைநாட்டுகிறது.

### 1.2 ஆய்வு முறையியல்

இவ்வாய்வு மூலநூல் அணுகுமுறையை (Textual Method) கையாள்கிறது. பெரியபுராணத்தில் இடம்பெறும் பூசலார் நாயனார் புராணப் பகுதியின் பாடலடிகளையும், அவற்றின் உரை விளக்கங்களையும் முதன்மை மூலமாகக் கொண்டு, அப்பகுதியை நிகழ்வு வரிசைப்படி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பல்லவர் கால வரலாற்றுத் தரவுகளை இணைத்து ஒப்பீட்டு அட்டவணைகளாகவும், விளக்கப் படங்களாகவும் முன்வைத்து, இலக்கியமும் வரலாறும் சந்திக்கும் புள்ளியை அடையாளம் காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. இலக்கியப் பின்னணி — சேக்கிழாரும் பெரியபுராணமும்

பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்) பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழாரால் இயற்றப்பட்ட தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் உச்சபட்சப் படைப்பாகும். இது அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் விவரிக்கிறது. சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கனின் (சுமார் கி.பி. 1133–1150) அவையில் அமைச்சராக விளங்கிய சேக்கிழார், தில்லை நடராசரை மையமாகக் கொண்டு இப்பெருங்காப்பியத்தை இயற்றியதாக மரபு கூறுகிறது (McGlashan; “Periya Puranam”). அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் இயற்றிய தேவாரப் பாடல்களைப் பாடிய அடியார்களின் வரலாறு இப்புராணத்தில் விரிவாகச் சொல்லப்படுகிறது; அத்துடன் பூசலார் நாயனார் போன்ற ஏனைய அடியார்களின் வாழ்க்கையும் இதில் பதிவாகியுள்ளது (Peterson).

முன்னுரையில் காணும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை உறுதிப்பொருள்களும் பூசலார் நாயனார் புராணத்தில் எவ்வாறு பொருள் பொதிந்து வெளிப்படுகின்றன என்பதனை பின்வரும் அட்டவணை தொகுத்துக் காட்டுகிறது.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in




**அட்டவணை 1: நான்கு உறுதிப்பொருள்களும் பூசலார் நாயனார் புராணத்தில் அவற்றின் வெளிப்பாடும்**

| உறுதிப்பொருள் | பொதுப் பொருள் | புராணத்தில் வெளிப்பாடு |
|---|---|---|
| அறம் | நீதி நெறி, கடமை உணர்வு | நிதி இல்லாத நிலையிலும் இறைபணியைக் கைவிடாத பூசலாரின் உறுதி |
| பொருள் | செல்வம், வளம் | கல், செங்கல், பொன் இன்றி மனத்தாலேயே பொருள் தேடும் புதுமை |
| இன்பம் | பேரானந்தம் | மனக்கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்த தன்னிறைவு |
| வீடு | வீடுபேறு, முத்தி | இறுதியில் நடராசர் திருவடி நிழல் சேர்தல் |

## 3. பூசலார் நாயனார் புராணம் — மூலபாட ஆய்வு

பெரியபுராணத்தில் இடம்பெறும் பூசலார் நாயனார் புராணப் பகுதியை நிகழ்வு வரிசைப்படி ஒன்பது உட்பிரிவுகளாகப் பிரித்து, அவற்றின் மூலப்பாடலடிகளையும் உரை விளக்கத்தையும் இக்கட்டுரை பின்வருமாறு வெளிப்படுத்துகிறது.

### 3.1 திருநின்றவூரின் உலகச் சிறப்பு

> *"உலகின் ஒழுக்கம் என்றும் உயிர்"*

ஆலயம் எடுக்க எண்ணிய பூசலார் வாழ்ந்த ஊர், உலகிலேயே உயர்ந்த சிறப்புடைய தொண்டை நாட்டின் நலம்மிகு சிறப்பை உடைய, நான்கு வேதங்களும் இடமாகக் கொண்ட பழைய ஊர். அவ்வூரின் குலத்தில் எந்நாளும் குன்றாத ஒழுக்கமும், சிறப்புடைய திருகின்றவூர் என்னும் பெயரும், கொள்கை நிலவிய செல்வமும், தரம் கொண்ட உயர்ந்த கோட்பாடுகளும், செல்வமாக இறைவனை வணங்கும் தன்மையும் நிலவின.

> *"அருமறை மரபு வாக"*

சிவபெருமான் திருவடியில் சேருமாறு அமையும் நெறியினின்றும் பிரியாது, அன்பு பொருந்தி ஒழுக்கம் நாளும் வளர்ந்து, மெய்ப்பொருளை அடைவதற்கு ஒப்பான மறைக் கலைகளை உணரும் விளக்கமுடைய உள்ளக்கோயிலாக அவ்வூர் விளங்கியது.

> *"உறைவதற்கு ஓர் கோயில்*
>
> *எடுப்பது மனத்துக் கொண்டார்*
>
> *இரு நிதி இன்மை எண்ணார்"*

கோயிலை அமைப்பதற்குப் பெரும் செல்வம் இல்லையே என்று நினைக்காமல், கங்கையைத் தன்னுடைய சடையிலே வைத்திருக்கும் இறைவன் மகிழ்ந்து எழுந்தருளி உறைவதற்கு ஒரு கோயிலைக் கட்டும் செயலைத் தம் உள்ளத்தில் பூசலார் கொண்டார்.

### 3.2 மனத்தால் ஆலயம் எடுக்கும் திருப்பணி

> *"மனத்தினால் கருதி எங்கும்*
>
> *நினைப்பினால் எடுக்க நேர்ந்து"*

திருக்கோயில் அமைப்பதற்கு வேண்டும் பொருளைத் தேடிப் பெறும் இடங்களையெல்லாம் உள்ளத்தில் நினைத்து, செங்கல்லை எங்கே வாங்குவது, படிகள் வாங்குவது, சிலை செய்வதற்குத் தங்கக் கற்களை எங்கே வாங்குவது என எண்ணி, 'இனி என்ன செய்வேன்' என வருந்தி, பணம் இல்லையே என்னும் நினைவால் கோயில் எழுப்ப உறுதி பூண்டார் பூசலார்.

> *"சாதனத் தோடும் தச்சர்*
>
> *தம்மையும் மனத்தால் தேடி*
>
> *நாதனுக்கு ஆலயம் செய் நலம்*

> *பெறு நல் நாள் கொண்டே*
>
> *ஆதரித்து அகமத்தால் அடிநிலை"*

திருக்கோயிலைக் கட்டுவதற்குரிய பொருள்களையும், தச்சர்களையும் மனத்தால் தேடிக்கொண்டு, இறைவனுக்குக் கோயில் எடுப்பதற்கு நல்ல நாளையும் பொழுதையும் குறித்துக்கொண்டு, ஆகம நெறியின்படி அடிநிலை எடுத்து, அன்பின் நிறைவினால் ஆசை மிகுந்து இரவும் பகலும் உறங்காமல் கோயிலை எடுத்தார்.

> *"அடிமுதல் உபாணம் ஆதி*
>
> *ஆகிய படைகள் எல்லாம்*
>
> *வடிவுறும் தொழில்கள் முற்ற*
>
> *மனத்தினால் வகுத்து மான*
>
> *முடிவுறு சிகரம் நானும்*
>
> *முன்னிய முகத்தில் கொண்டு*
>
> *நெடிது நாள் கூடக் கோயில்*
>
> *நிரம்பிட நினைவால் செய்தார்"*

திருக்கோயிலின் அடிநிலை முதல் திருக்கோபுரத்தின் அடிப்பகுதி வரையிலான அடுக்குகள் எல்லாவற்றையும், ஓவிய வேலைப்பாடுகள் பொருந்த மனத்தால் அமைத்து, விமானத்தின் முடிவில் அமையும் சிகரமும் ஆகமத்தில் விதிக்கப்பட்ட முழு அளவில் கொண்டு, நீண்ட நாள்களாகக் கோயில் நிறைவுபெற அனைத்தையும் மனத்தால் செய்தார்.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in



ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

**1. ஆலயம் எடுக்க எண்ணம் கொள்ளல்**

↓

**2. நிதி இன்மை உணர்ந்தும் எண்ணம் கைவிடாமை**

↓

**3. இடம், பொருள், தச்சர் ஆகியவற்றை மனத்தால் தேடல்**

↓

**4. நல்நாள் குறித்து ஆகம நெறிப்படி அடிநிலை எடுத்தல்**

↓

**5. அடிநிலை முதல் சிகரம் வரை மனத்தால் கட்டியெழுப்புதல்**

↓

**6. மதில், கிணறு, குளம் ஆகியவை அமைத்தல்**

↓

**7. கும்பாபிஷேகம் நிறைவு செய்தல்**

**படம் 1: பூசலார் நாயனார் மனத்தால் ஆலயம் எடுத்த படிநிலைகள்**

*(மூலம்: பெரியபுராணப் பாடலடிகள் அடிப்படையில் ஆய்வாளர் வகுத்தது)*

### 3.3 இராசசிம்மன் மன்னனும் காஞ்சி கைலாசநாதர் கோயிலும்

> *"காடவர் கோமான் கச்சிக்*
> *கற்றளி எடுத்து முற்ற*
> *மாடெலாம் சிவனுக்கு ஆகப் பெருஞ்*
> *செல்வம் வகுத்தல் செய்வான்*
> *நாடாமல் அறியாதாரைத் தாபிக்கும்*
> *எந்நாள் முன்னாள்*
> *ஏடலர் கொன்றை மேய்ந்தார்*
> *இரவிடைக் கனவில் எய்தி"*

பல்லவ மன்னனாகிய இராசசிம்மன் காஞ்சி மாநகரத்தில் கற்கோயில் எடுப்பித்து, அதன் முழுப் பகுதிகளிலும் சிவபெருமானுக்காகப் பெருஞ் செல்வங்களை நியமித்தான். திருமாலும்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

தேடுவதற்கு அரியவனான இறைவனைத் திருக்கோயிலில் எழுந்தருளுவதற்காக நியமித்த அந்நாளின் முந்தின நாள், இதழ்கள் விரிகின்ற கொன்றை மலர்களைத் தலையில் சூடிய இறைவன் இரவில் அவனது கனவில் தோன்றினார். இராசசிம்மன் எனப்படும் இம்மன்னன், பரமேசுவரவர்மனின் மகன் ஆவான். சைவ சித்தாந்தத்தில் பேரறிவுடையவனும், இசைப் புலவனும், மாபெரும் வீரனுமான இவனே காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டியவன் என்பது பெரியபுராண மரபு.




**படம் 2: பூசலார் நாயனார் புராணம் தொடர்பான முக்கியக் காலக்கோடு**

*(இடமிருந்து வலமாக: நரசிம்மவர்மன் முதலாமன் ஆட்சிக் காலம்; இராசசிம்மன் (நரசிம்மவர்மன் இரண்டாமன்) ஆட்சிக் காலம் — பரவலான வரலாற்றுக் கணிப்பு; இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலம், சேக்கிழார் அமைச்சராக விளங்கிய பொழுது; பெரியபுராணம் இயற்றப்பட்ட நூற்றாண்டு.)*

**அட்டவணை 2: இராசசிம்மன் மன்னன் — அடிப்படைத் தகவல்கள்**

| விவரம் | பெரியபுராண மரபு / மூலநூல் குறிப்பு | பொது வரலாற்று ஆய்வுக் குறிப்பு |
|---|---|---|
| இயற்பெயர் | இராசசிம்மன் (பரமேசுவரவர்மனின் மகன்) | நரசிம்மவர்மன் இரண்டாமன், "ராஜசிம்ஹா" என்றும் அழைக்கப்பெறுவான் ("Narasimhavarman II") |
| குடி | பல்லவர் குடி, காஞ்சி தலைநகர் | பல்லவர் குடி, காஞ்சி தலைநகர் |
| ஆட்சிக் காலம் (இக்கட்டுரை மூலநூல்படி) | கி.பி. 666–705 | பொதுவாக கி.பி. 695–728 எனக் கணிக்கப்படுகிறது ("Narasimhavarman II") |

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

| விவரம் | பெரியபுராண மரபு / மூலநூல் குறிப்பு | பொது வரலாற்று ஆய்வுக் குறிப்பு |
|---|---|---|
| கட்டிய கோயில் | காஞ்சி கைலாசநாதர் கோயில் | காஞ்சி கைலாசநாதர் கோயில்; கடற்கரைக் கோயில் (மாமல்லபுரம்) ("Kailasanathar Temple, Kanchipuram") |
| பண்பு நலன்கள் | சிவ பக்தன், வீரன், சைவ சித்தாந்த அறிஞன், இசைப் புலவன் | கலை இலக்கியப் புரவலன்; சமாதானமான ஆட்சிக் காலம் எனப் பொது ஆய்வாளர் கருத்து |

மேற்கண்ட அட்டவணையில் இக்கட்டுரையின் மூல ஆய்வுப் பனுவல் தரும் ஆட்சிக் காலமும் (கி.பி. 666–705), பொது வரலாற்று ஆய்வுகள் முன்வைக்கும் காலமும் (கி.பி. 695–728 எனச் "Narasimhavarman II" குறிப்பிடுகிறது) இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வேறுபாடு பெரியபுராண மரபுக் கணிப்பிற்கும், கல்வெட்டு அடிப்படையிலான நவீன வரலாற்று ஆய்விற்கும் இடையே உள்ள இயல்பான வேறுபாடாகும்; இரு தரப்பிலும் இராசசிம்மனே கைலாசநாதர் கோயிலைக் கட்டியவன் என்பதில் முரண்பாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 3.4 இறைவனின் கனவுக் காட்சி

> *"நின்றவூர்ப் பூசல் அன்பன்*
> *நெடிதுநாள் நினைந்து செய்த*
> *நன்று நீடு ஆலயத்து நாளை*
> *நாம் புகுவோம் நீ இங்கு*
> *ஒன்றிய செயலை நாளை ஒழிந்து*
> *பின் கொள்வாய் என்று*
> *கொன்றைவார் சடையார் தொண்டர்*
> *கோயில் கொண்டகுளப் போந்தார்"*

திருநின்றவூரில் உள்ள பூசல் என்ற அன்பன் நீண்ட நாள்களாக நினைவாலேயே செய்த நன்மையான கோயிலில் நாளை நாம் எழுந்தருளுவோம் என்றும், இங்குக் கனவில் பொருந்திய செய்கையான குடமுழுக்கை நாளை வைத்திருப்பதை மாற்றிக்கொள்ள எனவும் கூறி, கொன்றை

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

மலர்களைச் சூடிய நீண்ட சடையுடைய இறைவன், பூசலாரின் கோயிலில் எழுந்தருள வந்திருக்கும் திருமேனியைக் கொண்டு தோன்றினார்.

### 3.5 மன்னனின் திருநின்றவூர் பயணம்

> *"தொண்டரை விளக்கத் தூயோன் அருள்*
> *செயத் துயிலை நீங்கித்*
> *திண்திறல் மன்னன் அந்தத்*
> *திருப்பணி செய்தார் தம்மை*
> *கண்டு நான் வணங்க வேண்டும்*
> *என்று எழும் காதலோடு*
> *தண்டலைச் சூழல் சூழ்ந்த*
> *நின்றவூர் வந்து சார்ந்தான்"*

தொண்டரான பூசலாரை இவ்வுலகத்தார் அனைவரும் அறியும் வண்ணம் இராசசிம்மனின் முன் தோன்றிய சிவபெருமான் இவ்வாறு கூற, உறக்கத்தினை விட்டு எழுந்த திண்ணிய ஆற்றலையுடைய அம்மன்னன், ‘அத்தகைய திருப்பணி செய்பவரைக் கண்டு நான் வணங்க வேண்டும்’ என்ற அவலத்தோடும் பெருவிருப்பத்தோடும், சோலைகள் நிறைந்த திருநின்றவூரை வந்தடைந்தான்.

### 3.6 பூசலாரைத் தேடும் நிகழ்வு

> *"அப்பதி அணைந்து பூசல் அன்பர்*
> *இங்கு அமைந்த கோயில்*
> *எப்புடையது என்று அங்கண்*
> *எய்தினார் தம்மைக் கேட்கச்*
> *செல்லிய பூசல் கோயில் செய்தது*
> *ஒன்று இல்லை என்றார்*
> *மெய்ப் பெரு மறையோர் எல்லாம்*
> *வருக என்று உரைத்தான் வேந்தன்"*

மன்னன் திருநின்றவூரை அடைந்தவுடன், பூசலார் என்னும் சிவனடியார் கட்டிய கோயில் எங்குள்ளது என அங்கிருந்தவர்களிடம் கேட்டான். அவர்கள், பூசலார் கோயில் எதுவும் கட்டியதில்லை எனக் கூறினர். அதனைக் கேட்ட மன்னன், மெய்யுணர்வு தலைப்பட்ட அந்தணர்கள் எல்லோரும் ஒன்றுகூடி வருக என ஆணையிட்டான்.

> *"பூசுரர் எல்லாம் வந்து*
> *புரவலன் தன்னைக் காண*

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

> *மாசிலாப் பூசலார் தாம் யார்*
> *என மறையோர் எல்லாம்*
> *ஆசில் வேதியன் இவ்வூரான் என்று*
> *அவர் அழைக்க ஒட்டான்*
> *ஈசனார் அன்பர் தம்பால்*
> *எய்தினான் வெய்ய வேலன்"*

அந்த ஆணையின்படி அந்தணர்கள் எல்லோரும் ஒன்றுகூடிப் பல்லவ மன்னனைக் காண வந்தனர். 'குற்றம் இல்லாத பூசலார் யார்' என மன்னன் கேட்க, அவர்கள் எல்லோரும் 'அவர் குற்றமற்ற அந்தணர், இந்த ஊரைச் சார்ந்தவர்' எனக் கூறினர். அவ்வாறு கூறியவர்களிடம் பூசலாரை அழைத்து வருமாறு கட்டளையிடாமல், கொடிய வேலையுடைய அம்மன்னன் தானே பூசலாரைச் சென்றடைந்தான். அவன் நேரில் சென்று பூசலாரைக் காணச் சென்றதிலிருந்தே, மன்னனுக்கு அவர் மேல் இருந்த பக்தி புலனாகிறது.

### 3.7 மன்னனும் பூசலாரும் — சந்திப்பு

> *"தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது*
> *எடுத்த ஆலயம் தான் யாது இங்கு*
> *உம்மை கண்டடி பணியவந்தேன் கண்ணுதல்*
> *அருள் பெற்று என்றான்"*

நேரில் சென்று பூசலாரைக் கண்ட மன்னன், அவரை வணங்கித் தாங்கள் இவ்விடத்தில் தேவர் பெருமானான சிவபெருமானைத் தங்கள் கோயிலில் எழுந்தருளிவிக்கும் நாள் இன்று என்று தெரிந்ததால், கண்ணுதல் பெருமானின் திருவருளால் உங்களைக் கண்டு உங்கள் திருவடிகளை வணங்குவதற்கு வந்தேன் எனக் கூறினான்.

### 3.8 பூசலாரின் விளக்கமும் மனக்கோயில் உண்மையும்

> *"மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்*
> *...*
> *எம்பிரான் அருள் செய்தாரேல்*
> *முன்வரு நிதி இலாமை*
> *மனத்தினால் முயன்ற கோயில்"*

இவ்வாறு மன்னன் சொல்வதைக் கேட்ட பூசலார் நாயனார் வியப்படைந்து, மன்னனை நோக்கி, 'என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு எம்பெருமானார் இவ்வாறு அருளிச் செய்தாராயின், முன்னதாக வேண்டும் நிதி கிடைக்காத காரணத்தால் உள்ளத்தால் முயன்று நினைவளவில்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

செய்த கோயில் இதுவாகும்' என்று தம் சிந்தனையின் செயலாகச் செய்த கோயிலைத் தாம் விளக்கி எடுத்துச் சொன்னார்.

> *"அரசனும் அதனைக் அங்கு*
> *அதிசயம் எய்தி மன்னே*
> *புரையறு சிந்தை அன்பர் பெருமை*
> *என்று அவரைப் போற்றி"*

மன்னனும் பூசலார் கூறியதைக் கேட்டு வியப்படைந்தான். 'குற்றமில்லாத அன்பரின் பெருமை இருந்தவாறு என்னே' என்று அவரைப் போற்றி வணங்கி, நறுமணம் மிக்க மாலை கீழே படியுமாறு நிலத்தில் விழுந்து வணங்கி, முரசுகள் ஒலிக்கும் படைகளுடன் திரும்பித் தன் ஊரை அடைந்தான்.

### 3.9 நிறைவு — கும்பாபிஷேகமும் பூசலாரின் முடிவும்

> *"அன்பரும் அமைந்த சிந்தை*
> *ஆலயத்து அரணார் தம்மை*
> *...*
> *பின்பு பூசனைகள் எல்லாம் பெருமையில்*
> *பல நாள் பேணிப்"*

அடியாரான பூசலாரும் தம் உள்ளத்தில் அமைந்த திருக்கோயிலில் சிவபெருமானை நாளும் ஓரையும் நலமிக வந்த அமையத்து எழுந்தருள்வித்து நன்மை மிக, அதன்பின் செய்ய வேண்டிய வழிபாடுகள் எல்லாவற்றையும் பல நாள்கள் விரும்பச் செய்து வாழ்ந்திருந்த நிலையில், அம்பலவனத்தில் ஆடும் கூத்தப்பெருமானின் திருவடி நிழலைச் சேர்ந்தார்.

> *"நீண்ட செஞ் சடையினார்க்கு*
> *நினைப்பினால் கோயில் ஆக்கி*
> *பூண்ட அன்பிடை யறாத பூசலார்*
> *பொற்றாள் போற்றி*
> *ஆண்டகை வளவர் கோமான்*
> *உலகுய்ய அளித்த செல்லப்*
> *பாண்டிமா தேவியார் தம்*
> *பாதங்கள் பரவல் உற்றேன்"*

மிக நீண்ட சிவந்த சடையினை உடைய சிவபெருமானுக்கு உள்ளத்திலே கோயில் அமைத்துக்கொண்ட தம் அன்பினை இடையறாது செலுத்திய பூசலாரின் பொன்னடிகளைப் போற்றி, ஆண்மை மிக்க சோழர் பெருமான் உலகம் உய்யப் பெற்றுக் கொடுத்த செல்வப்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

பாண்டிமாதேவியாரான மங்கையர்க்கரசி அம்மையாரின் திருவடிகளைப் போற்றிப் புகழ்கின்றேன் என்று சேக்கிழார் இப்பகுதியை நிறைவு செய்கிறார். இராசசிம்மன் அமைத்த கைலாசநாதர் கோயிலின் கும்பாபிஷேகமும், பூசலார் மனத்தால் கட்டிய கோயிலின் கும்பாபிஷேகமும் ஒரே நாளில் நிகழ்ந்தமையே இப்பகுதியின் இலக்கியத் தலையாய நிகழ்வாகும்.

## 4. ஒப்பீட்டு ஆய்வு — அரசக் கோயிலும் மனக்கோயிலும்

இராசசிம்மன் கல்லாலும் செங்கல்லாலும் கட்டிய அரசக் கோயிலுக்கும், பூசலார் மனத்தாலேயே கட்டிய கோயிலுக்கும் இடையே சேக்கிழார் வகுக்கும் ஒப்புமையை பின்வரும் அட்டவணை தொகுத்துக் காட்டுகிறது.

**அட்டவணை 3: இராசசிம்மனின் அரசக் கோயிலும் பூசலாரின் மனக்கோயிலும் — ஒப்பீடு**

| ஒப்பீட்டு அம்சம் | இராசசிம்மன் அரசக் கோயில் | பூசலார் மனக்கோயில் |
|---|---|---|
| கட்டுமானப் பொருள் | கல், செங்கல், சுண்ணக் கலவை | மனம், நினைவு, பக்தி உணர்வு |
| நிதி ஆதாரம் | அரச கருவூலச் செல்வம் | நிதி முற்றிலும் இன்மை |
| கட்டுமான இடம் | காஞ்சி மாநகர் | திருநின்றவூர் (உள்ளத்தில்) |
| பணியாளர் | தச்சர், சிற்பிகள் (உடல் ரீதியாக) | தச்சர், சிற்பிகள் (மனத்தால் கற்பனையாக) |
| கால அளவு | நீண்ட கால அரசப் பணி | நெடுநாள் இடையறாத மனத் தவம் |
| கும்பாபிஷேக நாள் | நியமிக்கப்பட்ட நாள் | அதே நாள் — சிவபெருமான் தானே தேர்ந்தெடுத்தது |
| இறுதி அங்கீகாரம் | மன்னனின் பெருமை | இறைவனின் நேரடி முன்னுரிமை (பூசலார் கோயிலுக்கு முதலில் எழுந்தருளுதல்) |

இவ்வொப்பீட்டில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், பொருள் வளத்தால் மட்டுமே அளவிடப்படும் வெளிப்புறச் சாதனையை விட, உள்ளன்பினால் ஆற்றப்படும் அகவழிபாடே சிவபெருமானுக்கு மேலானது என்பதைச் சேக்கிழார் இந்நிகழ்வுகளின் ஒப்பீடு மூலம் நிலைநாட்டுகிறார். கனவில் இறைவன் தானே பூசலாரின் கோயிலுக்கு முதலில் புகுவதாகக் கூறுவது, அரசக் கோயிலின் பெருமையைக் குறைத்து மதிப்பிடாமல், மனத்தூய்மையின் உயர்வைச் சிறப்பித்துரைக்கும் இலக்கியத் தந்திரமாக அமைகிறது.

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

## 5. விவாதம் — பக்தி இலக்கியக் கூறுகள்

பூசலார் நாயனார் புராணம் சைவ சித்தாந்தத்தின் அகப்பக்திக் கோட்பாட்டிற்கு ஒரு சிறந்த இலக்கியச் சான்றாக அமைகிறது. 'தேவார மூவர்' உள்ளிட்ட பெரும்பாலான நாயன்மார்களின் வரலாறுகளில் வெளிப்புற ஆலயத் தொண்டும், இசைப் பாடலும் முதன்மை பெறுகையில், பூசலார் வரலாறு தனித்துவமாக, உடல் உழைப்போ பொருட் செலவோ இன்றி, மனத்தால் மட்டுமே ஆற்றப்பட்ட வழிபாட்டை முன்வைக்கிறது (Peterson). இது பக்தி இலக்கியத்தின் ஒரு முக்கிய கோட்பாட்டை — இறைவன் காணும்பொருள் அன்பின் அளவே தவிர, செலவிடப்பட்ட பொருளின் அளவு அன்று — உணர்த்துகிறது.

மேலும், இராசசிம்மன் போன்ற ஒரு பேரரசன் கூட, தன் அரச கௌரவத்தையும் மீறி, ஒரு சாதாரண அந்தணனைத் தேடிச் சென்று வணங்குதல் என்பது, பக்தி இலக்கியத்தில் மீண்டும் மீண்டும் காணப்படும் 'சாதி, செல்வம், அந்தஸ்து ஆகியவற்றை மீறிய பக்தி சமத்துவம்' எனும் கருப்பொருளுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அரசும் அடியாரும் ஒரே அளவுகோலின் கீழ் — அதாவது அன்பின் அளவுகோலின் கீழ் — மதிப்பிடப்படுவதே பெரியபுராணத்தின் அடிப்படைச் செய்தியாக இப்பகுதி வழி வெளிப்படுகிறது.

## 6. முடிவுரை

சேக்கிழார் அவர்கள் குலோத்துங்க சோழன் அவையில் அமைச்சராகவும், அவைப் புலவராகவும் விளங்கியவர். குலோத்துங்கனின் ஆணைப்படி பக்தி இலக்கியத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக உலகெலாம் தேடி அலைந்து, சிதம்பரத்தில் சென்று நடராசரைத் தரிசித்தார். 'உலகெல்லாம் உணர்ந்து ஓதற்குரியேன்' என்று நீ தானே அடியெடுத்துக் கொடுத்தாய், இப்பொழுதும் நான் உன்னைத்தான் தேடி வந்துள்ளேன் என்றார். அப்பொழுது சிவபெருமான் சேக்கிழார்க்கு 'உள்ளத்திலே ஆலயம் எடுக்க எண்ணி' வாழ்ந்த பூசலாரின் பக்தி வரலாற்றை எடுத்துரைத்தார்.

பூசலார் அவர்கள் உள்ளத்திலே ஆலயம் எடுக்கத் துவங்கி, நான்கு வேதங்களைக் கற்ற அந்தணர்கள் வாழும் பழைய திருநின்றவூரில், மனத்திலேயே கோயில் கட்டுவதற்கு உரிய இடங்களைத் தேடி அலைந்தார். தச்சர்களையும், வர்ணங்களைத் தீட்டுபவர்களையும், சிவன் சிலை செய்வதற்குரிய சிற்பிகளையும், கற்களையும் எல்லாம் தேடி அலைந்து, உள்ளத்திலேயே அல்லும் பகலும் பாராமல் கோயிலைக் கட்டி, கும்பாபிஷேகமும் நடத்தினார். இதனைச் சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் பூசலார் நாயனார் புராணப் பகுதியாகப் பதிவு செய்துள்ளார் என்பதை இவ்வாய்வுக் கட்டுரையில் ஆராய்ந்துள்ளேன்.

இறுதியாக, இவ்வாய்வு நிறுவும் மைய முடிபு யாதெனில், பெரியபுராணம் ஒரு காலக் கட்டப் புராண நூலாக மட்டும் நின்றுவிடாமல், வெளித்தோற்றமான சடங்கு நிறைவுகளை விடவும்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
Vol. [12] · Issue [04] · [September 2026
[https://www.tamilmanam.in

அகமன உணர்வின் தூய்மையே இறைவனுக்கு நெருக்கமானது என்னும் சைவ சித்தாந்த மெய்ம்மையை, வரலாற்றுச் சான்று பெற்ற கைலாசநாதர் கோயிலுடன் இணைத்து உறுதிசெய்யும் ஓர் இலக்கியச் சாதனமாகவும் விளங்குகிறது என்பதேயாகும்.

## துணைநின்ற நூல்கள் (Works Cited)

*(MLA — 9-ஆம் பதிப்பு முறைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது)*

[1]. 63 நாயன்மார் வரலாறு. திருமகள் பதிப்பகம், சென்னை.

[2]. “Kailasanathar Temple, Kanchipuram.” Wikipedia, Wikimedia Foundation, en.wikipedia.org/wiki/Kailasanathar_Temple,_Kanchipuram.

[3]. McGlashan, Alastair, translator. The History of the Holy Servants of the Lord Śiva: A Translation of the Periya Purāṇam of Cēkkiḻār. By Cēkkiḻār, Trafford Publishing, 2006.

[4]. “Narasimhavarman II.” Wikipedia, Wikimedia Foundation, en.wikipedia.org/wiki/Narasimhavarman_II.

[5]. பெரியன்னன், முனைவர் கொ. தமிழ் இலக்கிய வரலாறு. தியாகராய நகர், சென்னை.

[6]. பெரியபுராணம் மூலமும் உரையும். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (கழக வெளியீடு), சென்னை.

[7]. “Periya Puranam.” Wikipedia, Wikimedia Foundation, en.wikipedia.org/wiki/Periya_Puranam.

[8]. Peterson, Indira Viswanathan, translator. Poems to Śiva: The Hymns of the Tamil Saints. Princeton University Press, 1989.